# முதல் பருவ தொகுத்தறித் தேர்வு - 2023

7 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையை தேர்வு செய்க.** 5 X 1 = 5

1. கீழ்க்காணும் பாண்டிய அரசர்களுள் களப்பிரர் ஆட்சியை முடித்து வைத்தவர் என அறியப்படுபவர் யார்?
அ) கடுங்கோன் ஆ) வீரபாண்டியன் இ) கூன்பாண்டியன் ஈ) வரகுணன்

2. ............ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.
அ) சோழர் ஆ) பாண்டியர் இ) இராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்

3. நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு ............ விளிம்பின் அருகில் ஏற்படுகின்றது.
அ) மலை ஆ) சமவெளிகள் இ) தட்டுகள் ஈ) பீடபூமிகள்

4. உற்பத்தி என்பது ........... .
அ) பயன்பாட்டை அழித்தல் ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

5. இந்தியாவில் காணப்படும் ஆட்சிமுறை ........... .
அ) ஒரு கட்சி முறை ஆ) இரு கட்சி முறை
இ) பல கட்சி முறை ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

6. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது ........... உரிமை ஆகும்.
7. எதிர்கட்சி தலைவர் ............ அந்தஸ்தில் இருப்பார்.
8. உலகின் மிக நீண்ட கடற்கரை ......... ஆகும்.
9. ............... குடியிருப்பானது வழிபாட்டுத் தலங்களை சுற்றி அமைந்திருக்கும்.
10. ............. என்பது மனித உற்பத்தியில் ஓர் இடுபொருள்.

**III சரியா / தவறா எனக் கூறு.** 3 X 1 = 3

11. டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு மதுரையில் உருவானது.
12. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துக்கீசியப் பயணி கி.பி. 1522 – ல் சோழ பேரரசுக்கு வருகை புரிந்தார்.
13. இந்தியர்கள் ‘0’ முதல் ‘9’ வரையிலான எண்களை அரேபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

**IV பொருந்தாததை வட்டமிடுக.** 2 X 1 = 2

14. மீன்பிடித்தல், மரம் அறுத்தல், விவசாயம், வங்கி அலுவல்.
15. லாவா, எரிமலை வாய், சிலிக்கா, எரிமலை பள்ளம்.



www.Padasalai.Net

CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**V பொருத்துக.** 5 X 1 = 5

16. அ) கஜுராகோ - காயல்

ஆ) ரஸ்ஸியா - மக்களின் ஆட்சி

இ) வேம்பநாடு ஏரி - பந்தேல் கண்ட்

ஈ) மக்களாட்சி - மீன்பிடித்தல், சுரங்கத் தொழில்

உ) முதன்மை உற்பத்தி - ஜலாலுதீன் யாகுத்

**VI எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி.** 6 X 2 = 12

17. "காணிக்கடன்" பற்றி எழுதுக.
18. ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் யார்?
19. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகை சான்றுகளை கூறுக.
20. ஏதேனும் நான்கு ராஜபுத்திர குலங்களின் பெயர்களை எழுதுக.
21. சிஸ்மோகிராஃப் என்றால் என்ன?
22. சமத்துவம் என்றால் என்ன?
23. ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை கூறுகள் யாவை?
24. அரித்தல் வரையறு?
25. இனங்களின் வகைகள் யாவை?
26. பயன்பாடு என்பது என்ன?

**VII எவையேனும் நான்கு வினாக்களுக்கு விரிவான விடையளி.** 4 X 5 = 20

27. சோழர்களின் ஆட்சித்திறன் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.
28. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்?
29. எரிமலைகள் அழிவானதா அல்லது ஆக்கபூர்வமானதா?
30. சமத்துவத்தின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக.
31. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரிக்க.
32. கிராமப்புற குடியிருப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?

**VIII இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.** 8 X 1 = 8

33. அ) டெல்லி ஆ) மதுரை இ) நாளந்தா ஈ) பம்பாய்

34. **உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.**

அ) வட அமெரிக்கா புவிதட்டு ஆ) ஆப்பிரிக்கா

இ) ஆஸ்திரேலியா ஈ) இந்திய பெருங்கடல்



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CS CamScanner